இமாம் மாலிக் தீனார் (ரஹ்)
வரலாற்றுத் தொகுப்பு

ஆக்கம்
திருப்பூர்
K அமானுல்லாஹ்
செல் 9894197795

ஆக்கம்
திருப்பூர்

K அமானுல்லாஹ்

செல் 9894197795

பொருள் அடக்கம்

1. ஆன்மீகப் பெருவெளியின் சுடர் விளக்கு

1. போதை மயக்கமும் பிஞ்சு மகளின் பிரிவும்

2. பராஅத் இரவின் பயங்கரக் கனவு
3. நரகத்தின் விளிம்பும் அசரீரியின் முழக்கமும்
4. பொன்மலை வாசலும் அன்பு மகளின் வருகையும்
5. மடிமீது அமர்ந்த மழலையும் மாபெரும் திருக்குர்ஆன் வசனமும்
6. வினைகளும் நற்கருமைங்களும்: கனவின் விளக்கம்
7. விழிப்பும் தவ்பாவும்: மனிதப் புனிதரின் உதயம்
8. திமிஷ்க் பள்ளிவாசலும் ஓராண்டு கால இஃதிகாபும்
9. கள்ள நோக்கம் களைந்து தூய வணக்கம் புரிதல்
10. மக்களின் வருகையும் பதவியைத் துறந்த தூய்மையும்
11. பஸராவின் பற்றற்ற வாழ்வும் நாற்பதாண்டு பேரீச்சை விரதமும்
12. ஏழாவது நாள் நோன்பும் யூதன் என்ற விளியும்
13. இறைச்சித் துண்டுகளும் மனதிற்குச் சொன்ன ஆறுதலும்
14. உப்பில்லா ரொட்டியும் பதினேழு ஆண்டுகாலத் தவமும்
15. உலகை முத்தலாக் செய்த உத்தமர்
16. பஸராவின் தீ விபத்தும் மறுமையின் எச்சரிக்கையும்
17. ஹஜ்ஜுப் பெருவெளியில் மயங்கிய மாண்பு
18. சூரா ஃபாத்திஹாவின் அழுகையும் தாழ்மையும்
19. உண்மையான மகிழ்ச்சியும் கலீஃபாவின் அன்பளிப்பும்
20. காகமும் புறாவும்: நட்பின் இரகசியம்
21. மருமகனுக்குச் சொன்ன மார்க்க அறிவுரை
22. மார்க்கப் போரின் காய்ச்சலும் அசரீரியின் விளக்கமும்
23. நிரீஸ்வரனுடன் வாதமும் எரியாத கரங்களும்
24. கொடுமைக்கார யூதனின் மனமாற்றம்
25. நள்ளிரவு வணக்கமும் பரலோகக் கடிதமும்
26. கானகத்து ஞானி ஸாதூனின் சந்திப்பு
27. இறைநாமங்களின் ஐந்து எழுத்துக்களும் வாலிபனின் தியாகமும்
28. அநாதை ஜனாஸாவும் மலக்குகளின் பட்டோலையும்
29. முண்டமாகக் கிடந்த மனிதனும் காகத்தின் சேவையும்
30. கிருஸ்தவ குருவின் தூய நல்வழியும் பாவ உணர்வும்
31. அடிமைப் பெண்ணும் இரண்டு பேரீச்சைக் கொட்டைகளின் விலையும்
32. எஜமானனின் துறவறமும் கானகத்துப் பயணமும்
33. ஒரு இலட்சம் தீனாரும் சுவனத்து மாளிகைப் பத்திரமும்
34. அரசரின் செல்லப் பிள்ளையும் இறைவனின் நண்பனும்
35. சுங்க அதிகாரிகளின் அநியாயமும் மாலிக்கின் எச்சரிக்கையும்
36. கள்ளத்தராசும் மரணத் தவிப்பின் பத்து பதினொன்றும்
37. பிரசவ வேதனையும் நான்கு வயதுச் சிறுவனின் பிறப்பும்
38. இறுதிப் பேருரையும் ஆன்மாவின் விடைபெறலும்
39. சிறப்புப் பிரார்த்தனை (துஆ)

முன்னுரை: ஆன்மீகப் பெருவெளியின் சுடர் விளக்கு

இறைநேசச் செல்வர்களின் வரலாறுகள் வெறும் கதைகளல்ல; அவை இருண்ட இதயங்களை ஒளிபெறச் செய்யும் ஆன்மீக வழிகாட்டிகள். உமையா கிலாபத்தின் காலப்பகுதியில், பஸரா மாநகரின் தெருக்களில் பற்றற்ற துறவியாய், இறைவனின் பேரன்பில் திளைத்து வாழ்ந்த மாபெரும் ஞானி மாலிக் இப்னு தீனார் (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்களின் புனிதமான வாழ்க்கை வரலாறு இதோ புத்தக வடிவில் உங்களுக்காக...

1. போதை மயக்கமும் பிஞ்சு மகளின் பிரிவும்

மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் ஆரம்ப காலத்தில் பஸரா நகரின் ஊர்க் காவல்காரராகப் பணியாற்றி வந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் கடுமையான மதுப் பழக்கத்திற்கு அடிமையாகி, எப்பொழுதும் போதை மயக்கத்திலேயே மூழ்கிக் கிடந்தார்கள். ஆன்மீக நெறியிலிருந்து வெகுதூரம் விலகி நின்ற அவர்களின் வாழ்வில், மகிழ்ச்சி தரும் ஒரே ஒளியாக அவர்களின் அன்புத் திருமகள் திகழ்ந்தாள்.

தம் பிஞ்சு மகளுடன் விளையாடுவதே அவர்களின் அன்றாடப் பொழுதுபோக்காக இருந்தது. அம்மகளின் மீது அவர்கள் அளவற்ற பாசமும், எல்லையற்ற அன்பும் வைத்திருந்தார்கள். ஆனால், விதியின் சக்கரம் வேறு விதமாகச் சுழன்றது. அந்தச் சின்னஞ்சிறு குழந்தை, தன் மழலை மாறா வயதிலேயே மாலிக் (ரஹ்) அவர்களை ஆராத் துயரிலும் அழுகையிலும் ஆழ்த்திவிட்டு, இவ்வுலகை விட்டும் பிரிந்து சென்றது. மகளின் பிரிவு அவர்களின் இதயத்தை நொறுக்கியது.

2. பராஅத் இரவின் பயங்கரக் கனவு

நாட்கள் பல உருண்டோடின. அது ஒரு புனிதமிக்க பராஅத் இரவாகவும், வெள்ளிக்கிழமை இரவாகவும் அமைந்திருந்தது. அப்பொழுதும் மாலிக் (ரஹ்) மது அருந்திவிட்டு, அந்தப் போதையின் உச்சத்தில் இரவுத் தொழுகையைக் கூடத் தொழ மறந்து அயர்ந்து உறங்கிவிட்டார்கள். அந்த நள்ளிரவில், அவர்களின் ஆன்மாவை உலுக்கும் ஒரு பயங்கரமான கனவைக் கண்டார்கள்.

மஹ்ஷர் என்னும் மறுமை பெருவெளியிலே உலக மக்கள் யாவரும் திக்குமுக்காடித் திரண்டு நிற்கின்றார்கள். அப்போது, அண்டமே அதிரும் வகையில் ஒரு மாபெரும் கரும்பாம்பு, மாலிக் (ரஹ்) அவர்களை விழுங்குவதற்காக உக்கிரத்துடன் துரத்திக் கொண்டு வருகிறது. அவர்கள் உயிருக்குப் பயந்து வெருண்டோடுகின்றார்கள்.

வழியில் தூய வெண்ணாடை அணிந்த, நற்கருணை பொழியும் முதியவர் ஒருவரைக் காண்கின்றார்கள். "ஐயா! தம்மைக் காப்பாற்றுங்கள்" என்று அவரிடம் கெஞ்சுகின்றார்கள். அதற்கு அந்த நல்லார், "அப்பனே! நான் மிகவும் வலுவற்றவன்; அப்பாம்போ அதீத வலிமை கொண்டது. என்னால் உன்னைக் காப்பாற்ற இயலாதே! எனினும் நீ விரைந்து ஓடு, தப்பிக்க ஏதேனும் ஒரு வழி பிறக்கலாம்" என்று ஆற்றாமையுடன் கூறுகிறார்.

3. நரகத்தின் விளிம்பும் அசரீரியின் முழக்கமும்

பாம்பிற்குப் பயந்து மாலிக் (ரஹ்) ஓடி ஓடி, இறுதியாக நரகத்தின் கொதிக்கும் விளிம்பிற்கே வந்து விடுகிறார்கள். இன்னும் சில நொடிகள் தாமதித்தால் நரகத்தின்

தீக்குழம்பில் விழுந்து சாம்பலாகிவிடுவோம் என்ற நிலை ஏற்படுகிறது. அந்த மரண பயத்தின் உச்சத்தில், வானதிரும் பேரொலியோடு ஓர் அசரீரி முழங்குகிறது:

"மாலிக்கே! திரும்பிச் செல்லும்; நீர் இதற்காகப் படைக்கப்பட்டவரல்லர்!"

அந்தக் குரல் கேட்டு அவர்கள் திடுக்கிட்டுத் திரும்பி ஓடுகிறார்கள். பாம்போ இன்னும் விடாமல் துரத்துகிறது. வழியில் மீண்டும் அதே வெண்ணாடை புனைந்த நல்லாரைக் கண்டு, "தாங்கள் என்னைக் காப்பாற்றக் கூடாதா?" என்று கண்ணீர் வடித்து அலறுகிறார்கள்.

அவரோ, "நான் என்ன செய்வேன்? நான் பலவீனமானவன்" என்று கூறிவிட்டு, "அதோ தெரிகின்றதே ஒரு நல்மலை! ஆங்கு விரைந்து செல். அங்கு முஸ்லிம்களின் அடைக்கலப் பொருள்கள் (அமானிதங்கள்) உள்ளன. அவற்றின் மூலம் உனக்கு அபயம் கிடைக்கலாம்" என்று வழிகாட்டுகிறார்.

4. பொன்மலை வாசலும் அன்பு மகளின் வருகையும்

முதியவர் கூறிய வண்ணம் மாலிக் (ரஹ்) அந்த ஒளிரும் மலையை நோக்கி ஓடுகிறார்கள். பாம்பு அவர்களின் பின்னங்கால்களை நெருங்கிவிட்டது. அந்த மலையில் பொன்னாலும் நவரத்தினங்களாலும் ஆன இரு பேரொளி வாசல்கள் இருந்தன. அவற்றில் அழகிய திரைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

மாலிக் (ரஹ்) அங்கு அடைந்ததும், "திரைகளை அகற்றுங்கள்! இந்த ஏழைக்கு இங்கு அபயம் அளிக்க எவரும் உளரோ?" என்று ஒரு குரல் ஒலிக்கிறது. உடனே திரைகள் விலக, உள்ளிருந்து ஒளிர் வண்ண ஓவியங்கள் போலத் தூய சிறு குழந்தைகள் கூட்டம் கூட்டமாக வெளியே வருகின்றன.

இதற்குள் பாம்பு அவர்களை நெருங்கி, அதன் வாய்க்குள் அவர்கள் அகப்பட்டு நரகத்தின் வயிற்றுக்குள் புகுந்துவிடுவது போன்ற நிலை ஏற்படுகிறது. அப்பொழுது, அக்குழந்தைகளின் கூட்டத்திலிருந்து ஒரு பிஞ்சு குழந்தை சரேலெனப் பாய்ந்து வந்து, தன் இடக்கரத்தால் மாலிக் (ரஹ்) அவர்களை அணைத்துக் கொண்டு, வலக்கரத்தால் ஓர் எறி ஈட்டியை அப்பாம்பின் மீது வீசுகிறது. என்னே வியப்பு! அத்தனை உக்கிரமாக வந்த பாம்பு வெருண்டோடி மறைகிறது.

4. பொன்மலை வாசலும் அன்பு மகளின் வருகையும்

அப்பாம்பிடமிருந்து அவர்களைக் காப்பாற்றிய அக்குழந்தை, மாலிக் (ரஹ்) அவர்களைக் கீழே அமரச் செய்து, அவர்களின் மடி மீது அமர்கிறது. தன் பிஞ்சு வாய் திறந்து, "அப்பா!" என்று மழலை மொழியில் விளிக்கிறது.

அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் மாலிக் (ரஹ்) கண்களை அகல விரித்து உற்று நோக்குகிறார்கள். அது வேறு யாருமல்ல; தம்மைக் கண்ணீர்க் கடலில் ஆழ்த்திவிட்டுச் சென்ற அவர்களின் அன்புத் திருமகளே தான்! பாசம் பொங்கிட மகளைக் கட்டித் தழுவி, அவளது கன்னங்களில் முத்தங்களை வாரிச் சொரிகிறார்கள்.

அப்போது அக்குழந்தை, தன் தந்தையின் கன்னத்தில் தன் தளிர்க்கரத்தால் தட்டி, திருக்குர்ஆனின் 57-வது அத்தியாயத்தின் 16-வது வசனத்தை ஓதிக் காட்டுகிறது:

"விசுவாசங் கொண்டவர்களின் இதயங்கள் அல்லாஹ்வை நினைத்தும், அவன் இறக்கி வைத்த சத்திய வசனங்களைக் கவனித்தும் அஞ்சக் கூடிய நேரம் இன்னும் வரவில்லையா?"

மகள் திருக்குர்ஆன் ஓதுவதைக் கண்டு வியப்புற்ற மாலிக் (ரஹ்), "என் அருமை மகளே! உனக்குக் குர்ஆன் ஓதத் தெரியுமா?" என்று வினவுகிறார்கள். அதற்கு அக்குழந்தை, "ஆம் அப்பா! உங்களைவிட அதிகமாகவே நாங்கள் அதனை இங்கே அறிந்து வைத்துள்ளோம்" என்று பதிலளிக்கிறது.

6. வினைகளும் நற்கருமங்களும்: கனவின் விளக்கம்

மாலிக் (ரஹ்) அவர்கள் தம் மகளிடம், "மகளே! என்னை விடிய விடியத் துரத்தி வந்த அந்தப் பயங்கரப் பாம்பு யாது?" என்று கேட்கிறார்கள்.

அதற்கு மகள், "அப்பா! அதுதான் நீங்கள் பூமியில் செய்த தீவினைகளும் பாவங்களும் திரண்ட உருவம்! அது உங்களை விழுங்கி நரகத்தில் தள்ள முயன்றது" என்றாள்.

"அப்படியானால், வழியில் நான் சந்தித்த அந்த வெண்ணாடை அணிந்த நல்லவர் யார்?" என்று அடுத்து வினவினார்கள்.

"அவர்தான் நீங்கள் செய்த நற்செயல்களின் பிரதிபிம்பம். உங்களின் தொடர் பாவங்களால் அவரை நீங்கள் மிகவும் பலவீனமாக்கிவிட்டீர்கள். எனவேதான், அவரால் உங்களுக்கு உதவ இயலாமல் போய்விட்டது" என்று விளக்கினாள்.

"நீங்கள் அனைவரும் இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு, "முஸ்லிம்களின் குழந்தைகளாகிய நாங்கள் மரணித்த பின் இங்கே தங்கியிருந்து உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம். நீங்கள் மறுமையில் எங்களிடம் வரும் பொழுது, உங்களுக்காக நாங்கள் அல்லாஹ்விடம் பரிந்துரை செய்வோம்" என்று கூறினாள்.

7. விழிப்பும் தவ்பாவும்: மனிதப் புனிதரின் உதயம்

இத்துடன் மாலிக் (ரஹ்) அவர்களின் கனவு கலைந்தது. உடல் நடுங்க, திடுக்கிட்டு விழித்தெழுந்தார்கள். நள்ளிரவில் அவர்களின் கண்கள் கண்ணீரைப் பொழிந்தன. "யா அல்லாஹ்! இதோ என் இதயம் உனக்காக அஞ்சி நடுங்குகிறது" என்று கதறி, உண்மையான தூய உள்ளத்துடன் பாவமன்னிப்பு (தவ்பா) கோரினார்கள்.

அவர்களின் வாழ்விலே அது ஒரு மாபெரும் ஆன்மீகத் திருப்புமுனையாக அமைந்தது. அன்று முதல் ஒரு புது மனிதராக, மாபெரும் ஞானியாக, மனிதப் புனிதராக அவர்கள் உருவெடுத்தார்கள். தாபித் என்று இயற்பெயர் தாங்கிய அவர்கள், வரலாற்றிலே 'மாலிக் இப்னு தீனார்' என்ற அழியாப் பெயருடன் உலவராயினர்.

7. விழிப்பும் தவ்பாவும்: மனிதப் புனிதரின் உதயம்

உமையா கிலாபத்தின் தலைமைப் பீடமாகிய திமிஷ்க் (டமாஸ்கஸ்) மாநகரிலே முஆவியா (ரலி) அவர்கள் அரசோச்சிக் கொண்டிருந்த காலத்தில், வானளாவிய மினாராக்களுடன் மாபெரும் பள்ளிவாயல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

அதன் உள்ளே நுழைந்த மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள், அப்பள்ளிவாயலின் எழிலாலும் பிரம்மாண்டத்தாலும் பெரிதும் ஈர்க்கப்பட்டார்கள். அங்கே பல நாட்கள் 'இஃதிகாப்' (தனித்திருத்தல்) இருந்தார்கள். அப்பொழுது அவர்களின் உள்ளத்தில் ஒரு உலகாயத எண்ணம் குறுக்கிட்டது. "இப்பள்ளிவாயலுக்கு ஏராளமான வக்பு சொத்துக்கள் உள்ளனவே! நாம் இதன் மேலாளர் (முத்தவல்லி) ஆகிவிடின் அவையெல்லாம் நம் வசம் ஆகுமே" என்று எண்ணினார்கள்.

தம்மை அப்பதவிக்குத் தகுதியுள்ளவராக மக்கள் கருத வேண்டும் என்பதற்காக, கள்ள நோக்குடன், எங்கும் செல்லாது அப்பள்ளியிலேயே ஓராண்டு காலம் இஃதிகாப் இருந்து இபாதத்துகளில் ஈடுபட்டார்கள். ஆனால், அவர்களின் உள்ளுணர்வோ, "மாலிக்! நீ ஒரு நயவஞ்சகன் (முனாஃபிக்) ஆகிவிட்டாய்" என்று அவர்களை எச்சரித்துக் கொண்டே இருந்தது.

9. கள்ள நோக்கம் களைந்து தூய வணக்கம் புரிதல்

ஓராண்டு காலம் முடிந்ததும் அவர்கள் ஒருநாள் பள்ளிவாயலை விட்டு வெளியே சென்றபொழுது, "மாலிக்! நீ ஏன் இன்னும் உண்மையான பாவமன்னிப்புக் கோராமல் இருக்கிறாய்?" என்று உருவமற்ற ஒரு குரல் (அசரீரி) கேட்டது.

அதிர்ந்து போன மாலிக் (ரஹ்) உடனே பள்ளிவாயல் திரும்பி, கதிகலங்கி அழுது இறைஞ்சினார்கள்: "இறைவா! என் எஜமானனே! என் பிழையைப் பொறுத்தருள்வாய். மக்கள் என்னைப் பெரிய வணக்கவாளி என்று மதித்து, பள்ளி மேலாளர் பதவியை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கள்ள நோக்குடன் இதுகாறும் நான் இங்கு வீற்றிருந்ததை நீ நன்கு அறிவாய். இப்பொழுது நான் அந்தத் தீய எண்ணங்களையெல்லாம் முறித்துவிட்டு, உனக்காக, உன் திருமுகத்தின் அருள் பெறுவதற்காக மட்டுமே தூய உள்ளத்துடன் வணங்கப் போகின்றேன். என் மீது அருள் புரிவாயாக!" என்று அழுது அன்றிரவு முழுவதும் உருகித் தொழுதார்கள்.

10. மக்களின் வருகையும் பதவியைத் துறந்த தூய்மையும்

பொழுது புலர்ந்தது. இரவு முழுவதும் தொழுத அவர்கள், காலையிலும் இறை வழிபாட்டிலேயே மூழ்கியிருந்தார்கள். அப்பொழுது, திமிஷ்க் நகரப் பெருமக்கள் கூட்டம் கூட்டமாக வந்து தமக்குப் பின்னால் அமர்வதை உணர்ந்தார்கள். தொழுகையை விரைவில் முடித்துவிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

அங்கிருந்த தலைவர்கள் அவர்களை நோக்கி, "மதிப்பிற்குரிய ஐயா! நம் பள்ளி நிர்வாகத்தில் ஊழல் மலிந்து கிடப்பதை நீங்கள் அறிவீர்கள். தங்களைப் போன்ற ஒரு தூய்மையான வணக்கவாளி இதன் மேலாளராகப் பொறுப்பேற்று, 'வக்பு' சொத்துக்களை நிர்வகித்தால் மட்டுமே இப்பள்ளி சிறக்கும் என்று நாடி, தங்களை நியமிக்க வந்துள்ளோம்" என்று கூறினர்.

இதுகேட்ட மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களுக்கு அழுகை முட்டியது. கிப்லாவின் பக்கம் முகத்தைத் திருப்பி, "இறைவா! பிறர் புகழ வேண்டும் என்பதற்காக ஓராண்டு காலம் நான் கள்ள நோக்குடன் வணங்கியபோது என்னை எவரும் ஏறிட்டும் பார்க்கவில்லை. ஆனால், இன்று உனக்காக மட்டுமே தூய உள்ளத்துடன் நான் தொழத் துவங்கிய கணத்தில், நான் எதை ஆசைப்பட்டேனோ அதையே இத்தனை மனிதர்கள் வடிவில் என் காலடியில் கொண்டு வந்து கொட்டிவிட்டாய்! என் இறைவா! உன் மாண்பின் மீது ஆணையாக, எனக்கு இந்த உலகப் பதவி வேண்டாம்; இனி ஒருபோதும் இப்பதவியை நான் ஏற்க மாட்டேன்!" என்று அழுது பிராத்தித்துவிட்டு, மக்களை நோக்கித் தம்மால் இப்பொறுப்பை ஏற்க இயலாது என்று கூறி, அக்கணமே அப்பள்ளிவாயிலை விட்டும் நீங்கினார்கள்.

10. மக்களின் வருகையும் பதவியைத் துறந்த தூய்மையும்

இதன்பின் அவர்களின் வாழ்விலே துறவறத்தின் உன்னத அத்தியாயம் துவங்கியது. உலக ஆசாபாசங்களையெல்லாம் அறுத்தெறிந்து, பற்றற்ற ஞானியாய் வாழத்

துவங்கினார்கள். அவர்கள் பஸரா மாநகரில் நாற்பது ஆண்டுகள் வாழ்ந்த போதிலும், ஒரு நாளேனும் தம் ஆசைக்காகப் பேரீச்சம்பழம் வாங்கித் தின்றதில்லை.

கடைவீதிக்குச் செல்லும்போது மக்கள் பேரீச்சம்பழம் வாங்குவதைக் கண்டு, "மக்களே! நான் நாற்பது ஆண்டுகளாகப் பேரீச்சம்பழம் தின்னவில்லை, அதற்காக என் உடல் நலிவடையவில்லை. ஆனால், நீங்கள் தினந்தோறும் பேரீச்சம்பழம் தின்னுகின்றீர்கள், அதன் காரணமாக உங்களின் உடல் எவ்விதப் பொலிவும் பெற்றுவிடவில்லை" என்று ஆன்மீகத் தத்துவத்தைக் கூறுவார்கள்.

ஒருமுறை ஒருவர் அன்பளிப்பாகக் கொடுத்த பேரீச்சம்பழங்களை நீண்ட நேரம் கையில் வைத்திருந்துவிட்டு, "இவற்றை நீரே உண்ணும்; நான் நாற்பது ஆண்டுகளாக இவற்றை உண்பதில்லை" என்று திருப்பி அளித்துவிட்டார்கள்.

12. ஏழாவது நாள் நோன்பும் யூதன் என்ற விளியும்

மற்றொரு நாள், அவர்களுக்குப் பேரீச்சம்பழம் தின்ன வேண்டும் என்ற இச்சை (நப்ஸ்) மிகைத்தது. உடனே அவர்கள் தம் மனதை நோக்கி, "மனமே! திமிருகின்றாயா? உன் திமிரை அடக்குகின்றேன் பார்!" என்று அதட்டினார்கள். அன்றிரவு கனவில், "நீர் உம் மனதை அதிகமாகத் துன்புறுத்த வேண்டாம், அதன் ஆசையைச் சற்று நிறைவேற்றும்" என்று அசரீரி கேட்டது.

விழித்தெழுந்த மாலிக் (ரஹ்) தன் மனதிடம், "நல்லது மனமே! நீ தொடர்ந்து ஏழு நாட்கள் பகலெல்லாம் நோன்பு நோற்றால், உன் ஆசையை நிறைவேற்றுகிறேன்" என்றார்கள். மனமும் உடன்பட்டது. ஏழாவது நாள் மாலை, நோன்பு திறக்கும் நேரம் வந்ததும் கடைவீதிக்குச் சென்று பேரீச்சம்பழம் வாங்கினார்கள். மக்கள் அதை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

அப்பழங்களுடன் பள்ளிவாயிலுக்குச் சென்று, நோன்பு திறக்க பொட்டலத்தை அவிழ்த்தபோது, அங்கிருந்த ஒரு சிறுவன், "அப்பா! ஓடி வாருங்கள், இங்கே ஒரு யூதர் பகலில் பேரீச்சம்பழம் தின்னுகிறார்!" என்று கத்தினான். அச்சிறுவனின் தந்தை தடியுடன் ஓடிவந்து பார்த்தபோது, அங்கே அமர்ந்திருப்பது மதிப்பிற்குரிய மாலிக் (ரஹ்) என்பதைக் கண்டு அதிர்ந்து, அவர்களின் காலில் விழுந்து, "ஐயா! என் பிழையைப் பொறுத்து அருளுங்கள். இப்பகுதியில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் பகலில் நோன்பு நோற்பதால், பகலில் உண்பவர் யூதர்கள் மட்டுமே என்று என் மகன் தவறாக எண்ணிவிட்டான்" என்று கதறினார்.

மாலிக் (ரஹ்) அவர்களின் கண்கள் குளமாயின. கையிலிருந்த பேரீச்சம்பழப் பொட்டலத்தைக் கீழே போட்டுவிட்டு, அன்றிரவு முழுவதும் தூங்காமல் அழுது பிராத்தித்தார்கள்: "இறைவா! நாற்பதாண்டுகளாக நான் பேரீச்சம்பழம் தின்னாதிருந்து, இன்று சற்றே சுவைக்க நினைத்ததற்கு 'யூதன்' என்ற பெயரை ஒரு சிறுவன் மூலம் எனக்குப் பரிசாகத் தந்தாய்! ஒருவேளை நான் அதைத் தின்றிருந்தால் என்னை 'காஃபிர்' என்று கூடச் சொல்லியிருப்பாய் போலும்! உன் மாண்பின் மீது ஆணையாக, நான் இனி ஒருபோதும் பேரீச்சம்பழம் உண்ண மாட்டேன்!" என்று சபதம் செய்தார்கள். அதேபோல, நாற்பது ஆண்டுகளாகப் பால் அருந்த வேண்டும் என்ற ஆசையையும் அவர்கள் கட்டுப்படுத்தி, உலகை முழுமையாக மணவிலக்குச் செய்து வாழ்ந்தார்கள்.

12. ஏழாவது நாள் நோன்பும் யூதன் என்ற விளியும்

ஒருமுறை மாலிக் (ரஹ்) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, அவர்களுக்கு இறைச்சி உண்ண வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. பிணி நீங்கியதும் நேராக இறைச்சிக் கடைக்குச் சென்று மூன்று இறைச்சித் துண்டுகளை வாங்கி, எவருக்கும் தெரியாமல் தன் சட்டைக் கைக்குள் மறைத்துக்கொண்டு ஒரு மலையுச்சிக்குச் சென்றார்கள்.

அவர்களின் விசித்திரமான செய்கையைக் கண்ட இறைச்சிக் கடைக்காரன், தன் பணியாளை அனுப்பி அவர்களைப் பின்தொடரச் செய்தான். மலையுச்சியில் மறைந்திருந்து பார்த்த பணியாள், கண்ட காட்சியை வந்து கடைக்காரனிடம் அழுதுகொண்டே கூறினான்:

"முதலாளி! மாலிக் (ரஹ்) அவர்கள் அந்த மூன்று இறைச்சித் துண்டுகளையும் வெளியே எடுத்து, மூன்று முறை முகர்ந்து பார்த்தார்கள். பின்னர் தன் மனதை நோக்கி, 'மனமே! இவ்விறைச்சித் துண்டுகளில் உனக்குள்ள பங்கு இவ்வளவுதான் (முகர்வது மட்டும்தான்), இதற்கு மேல் உனக்கு இதில் உரிமையில்லை' என்று கூறிவிட்டு, அவற்றை அங்கிருந்த ஓர் ஏழைக்கு தர்மம் செய்துவிட்டார்கள்! பின்னர் தன் மனதிடம், 'மனமே! நான் உன் மீதுள்ள வெறுப்பால் உன்னை ஏமாற்றவில்லை. பொறுமையைக் கடைப்பிடி; இப்பொறுமையின் காரணமாக மறுமையில் நீ அழிவற்ற பேரின்ப வாழ்வை அடைவாய்' என்று ஆறுதல் கூறினார்கள்" என்றான்.

14. உப்பில்லா ரொட்டியும் பதினேழு ஆண்டுகாலத் தவமும்

ஓரிரவு மாலிக் (ரஹ்) அவர்களின் கனவில், "இன்ன இடத்தில் வாழும் இறைநேசச் செல்வரைச் சென்று காண்க!" என்று உத்தரவிடப்பட்டது. தொடர்ந்து பல இரவுகள் இக்கனவு வரவே, அவர்கள் அவ்விடம் சென்றார்கள். அங்கே ஒரு பெரியவர் பாங்கு சொல்லிக் கொண்டிருந்தார். பாங்கு முடிந்ததும், மாலிக் (ரஹ்) அவர்களின் பெயரைச் சொல்லி அழைத்து ஸலாம் கூறினார்.

அதிசயித்த மாலிக் (ரஹ்), "என் பெயர் தங்களுக்கு எப்படித் தெரியும்?" எனக் கேட்க, "உம்மை இங்கே அனுப்பி வைத்தானே அந்த இறைவனே எனக்கு அறிவித்தான்" என்றார் அப்பெரியவர். பின்னர் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று இரு ரொட்டிகளை வைத்தார். தொட்டுண்ண சிறிது உப்பு கேட்டதும், ஒரு பணிப்பெண் தூசு படிந்த உப்புக் கலயத்தைக் கொண்டு வந்தாள்.

உப்பைத் தொட்டு ரொட்டியைத் தின்று முடித்த மாலிக் (ரஹ்), உப்பிற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். அதைக் கேட்ட அப்பணிப்பெண், "ஐயா! நீங்கள் ஒருவேளை உப்பிற்கு இவ்வளவு நன்றி செலுத்துகிறீர்கள். நாங்களோ பதினேழு ஆண்டுகளாக உப்பில்லாமலேயே ரொட்டி தின்று வருகிறோம். அந்த உப்புக் கலயத்தின் மீது படிந்துள்ள தூசியே அதற்குச் சாட்சி!" என்றாள். இதைக் கேட்டுத் தன் குறையுணர்வை எண்ணி அழுத மாலிக் (ரஹ்), காடுகளுக்குச் சென்று கடும் தவம் புரியலானார்கள்.

15. உலகை முத்தலாக் செய்த உத்தமர்

செல்வமும் அழகும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஒரு சீமாட்டி, மாலிக் (ரஹ்) அவர்களின் ஆன்மீக அழகால் ஈர்க்கப்பட்டு, தனக்கு அவர்களைத் திருமணம் முடித்து வைக்குமாறு மாபெரும் ஞானி தாபித்துல் புனானி (ரஹ்) அவர்களிடம் தூது அனுப்பினாள்.

தாபித் (ரஹ்) அவர்கள் இக்கோரிக்கையை மாலிக் (ரஹ்) அவர்களிடம் கூறியபோது, அவர்கள் புன்னகைத்து, "முஹம்மதே! நான் ஏற்கனவே இந்த உலகை 'முத்தலாக்'

(மூன்று விடுத்தம் மணவிலக்கு) செய்துவிட்டேன். விவாகரத்துச் செய்த ஒருத்தியை மீண்டும் நான் எப்படி மணமுடிப்பது?" என்று மறுத்துவிட்டார்கள்.

தம் முதல் மனைவி இறந்தபின் அவர்கள் மறுமணம் செய்யவில்லை. "ஏன் மறுமணம் செய்யவில்லை?" என்று கேட்டதற்கு, "உள்ள தொந்தரவுகளே போதும் என்றிருக்கும் போது, இன்னும் பல உலகத் தொந்தரவுகளை இழுத்துப்போட்டு என் இறை வணக்கத்திற்கு இடையூறு விளைவிக்க நான் விரும்பவில்லை" என்று பதிலளித்தார்கள்.

16. பஸராவின் தீ விபத்தும் மறுமையின் எச்சரிக்கையும்

ஓரிரவு பஸரா மாநகரில் பல வீடுகள் தீப்பற்றி எரிந்தன. மக்கள் அலறியடித்து ஓடினர். பற்றற்ற துறவியான மாலிக் (ரஹ்) அவர்கள், தங்களின் கைத்தடியையும் காலணியையும் மட்டும் எடுத்துக் கொண்டு, தம் வீட்டின் முகட்டிற்குச் சென்று வேடிக்கை பார்த்தார்கள்.

சிலர் தீயில் வெந்து மடிவதையும், சிலர் பொருள்களை எடுக்க ஓடிச் சாம்பலாவதையும் கண்டு கண்ணீர் உகுத்தார்கள். அப்போது அவர்களின் புனித வாயிலிருந்து ஞானமொழிகள் வெளிவந்தன:

"இவ்விதமாகவே மறுமையிலும் நிகழும்! உலகச் சுமை குறைவாக (இலேசாக) உடையோர் ஈடேற்றம் பெற்றுத் தப்பிவிடுவர்; பாவச் சுமை பளுவாக உடையோர் நரக நெருப்பில் வீழ்ந்து அழிவர்!"

ஒருமுறை அவர்கள், "என்னை மக்கள் துறவி என்கிறார்கள். ஆனால் உண்மையான துறவி கலீஃபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் ஆவார்கள். உலகச் செல்வமெல்லாம் அவர்களின் காலடியில் கிடந்தபோதும், அவர்கள் அதை ஏறிட்டும் பார்க்கவில்லை" என்று தங்களின் பணிவை வெளிப்படுத்தினார்கள்.

17. ஹஜ்ஜுப் பெருவெளியில் மயங்கிய மாண்பு

மாலிக் (ரஹ்) அவர்களின் உள்ளம் எப்பொழுதும் இறையச்சத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. ஒருமுறை அவர்கள் மக்காவுக்கு ஹஜ் செய்யச் சென்றிருந்தபோது, 'லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்' (இதோ உனக்கு அடிபணிந்தேன் இறைவா) என்று தல்பியா கூறத் துவங்கிய மாத்திரத்தில், பயங்கரமான நடுக்கம் ஏற்பட்டு மயங்கி விழுந்தார்கள்.

மயக்கம் தெளிந்ததும், ஜாஃபர் இப்னு சுலைமான் (ரஹ்) அவர்கள், "தாங்கள் மயங்கியதற்குக் காரணம் யாது?" என்று கேட்டார்கள். அதற்கு மாலிக் (ரஹ்), "நான் 'லப்பைக்' (அடிபணிந்தேன்) என்று கூறும்போது, வானிலிருந்து 'லா லப்பைக்' (நீ எனக்கு அடிபணியவில்லை, உன் வணக்கம் ஏற்கப்படவில்லை) என்று பதில் வந்துவிட்டால் என் கதி என்னாகும் என்ற பயமே என்னை மயக்கமுறச் செய்தது" என்று விடையளித்தார்கள்.

மற்றொரு முறை கஃபாவை வலம் வரும்போது, சுஃபா திரையைப் பிடித்து ஒரு பெண் அழுதுகொண்டே, "இறைவா! என் உலக இன்பங்கள் போய்விட்டன, தண்டனை மட்டுமே எஞ்சியுள்ளது. உன்னிடத்தில் எனக்கு நரகத்தைத் தவிர வேறொன்றும் இல்லையா?" என்று வைகறை வரை கதறினாள். இதைக் கேட்ட மாலிக் (ரஹ்) தங்களின் பழைய பாவ வாழ்வை நினைத்து, பெரும் சத்தமிட்டுக் கதறி அழுதார்கள்.

18. சூரா ஃபாத்திஹாவின் அழுகையும் தாழ்மையும்

மாலிக் (ரஹ்) அவர்கள் தொழுகையில் சூரா ஃபாத்திஹாவை ஓதும்போது, "இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன்" (உன்னையே வணங்குகின்றோம்; உன்னிடமே உதவி தேடுகின்றோம்) என்ற வசனத்திற்கு வரும்போது தங்களை அறியாமல் கதறி அழுதுவிடுவார்கள்.

"ஏன் அழுகின்றீர்கள்?" என்று கேட்டால், "நாம் நம்முடைய இச்சைகளை வணங்கிக்கொண்டும், பிற மனிதர்களின் வாசல்களில் போய் உதவி தேடிக்கொண்டும் இருக்கும்போது, 'உன்னையே வணங்குகிறேன்' என்று இறைவனிடம் பொய் சொல்வது நமக்குத் தகுமா? இத்திருவசனம் குர்ஆனில் இல்லாது போயிருந்தால் நான் இந்த சூராவை ஓதவே அஞ்சுவேன்" என்றார்கள்.

ஒருமுறை அவர்கள் பள்ளிவாயிலில் சொற்பொழிவு ஆற்றும்போது, "மக்களே! இப்பள்ளியின் வாசலில் ஒருவர் நின்றுகொண்டு, 'உள்ளே இருப்பவர்களில் மிகவும் தீயவன் எவனோ அவன் வெளியே வரட்டும்' என்று சப்தமிட்டால், நானே முதலில் வெளியே செல்வேன். அத்தகு தீயவன் நான்!" என்று தங்களை அற்பமாகக் கருதிக் கூறினார்கள். இதைக் கேள்விப்பட்ட மாபெரும் அறிஞர் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்), "அவர்களின் இந்தத் தாழ்மையில்தான் அவர்களின் ஆன்மீகப் பெருமை ஒளிந்திருக்கிறது" என்றார்கள்.

18. சூரா ஃபாத்திஹாவின் அழுகையும் தாழ்மையும்

தாழ்மையைப் பற்றி மாலிக் (ரஹ்) விவரிக்கும்போது, அங்கிருந்த இருவர், "ஒருவனுக்குப் போதுமான உணவும், பிறரை எதிர்பார்க்காத நிலையும் கிடைத்துவிட்டால் அவன் மகிழ்ச்சியுடையவன் அல்லவா?" எனக் கேட்டனர். அதற்கு அவர்கள், "அபூயஹ்யாவே! அப்படியல்ல; காலையிலும் மாலையிலும் உணவு கிடைக்காது பட்டினியாய் இருக்கும் நிலையிலும், இறைவன் விதித்த விதியைப் பொருந்திக் கொண்டு எவன் திருப்தியுடன் இருக்கிறானோ, அவனே உண்மையான மகிழ்ச்சியுடையவன்" என்றார்கள்.

ஒருமுறை கலீஃபாவிடமிருந்து அவர்களுக்குப் பதினாயிரம் திர்ஹம்கள் அன்பளிப்பாக வந்தன. அதில் ஒரு காசைக் கூடத் தனக்கென வைக்காமல் அத்தனையையும் தர்மம் செய்தார்கள். அப்போது முஹம்மது இப்னு வாஸிஃ (ரஹ்) அவர்கள், "மாலிக்! கலீஃபா அத்தனை பணத்தை அனுப்பியபோது, அவர் மீது உமக்குச் சற்று அன்பு ஏற்பட்டது அல்லவா?" எனக் கேட்டார். "ஆம்" என்றார்கள் மாலிக் (ரஹ்).

அதற்கு முஹம்மது (ரஹ்), "இதைத்தான் நான் அஞ்சினேன்; அரசரின் பொருள் தன் தீய குணத்தை உம்மிடமும் காட்டிவிட்டது" என்றார். இக்கூற்று மாலிக் (ரஹ்) அவர்களைச் சுடரச் செய்தது. அக்கிரமக்கார அரசர்களிடம் அன்பளிப்புப் பெறுவது அவர்கள் மீது அற்ப அன்பை உண்டாக்கிவிடும் என்பதால், இனிமேல் யாரிடமிருந்தும் எதையும் பெறுவதில்லை என்று திடமான முடிவுக்கு வந்தார்கள்.

20. காகமும் புறாவும்: நட்பின் இரகசியம்

உலகில் மனிதர்களுக்கிடையே ஏற்படும் அன்பிற்கு அவர்களின் ஒரே விதமான மன உணர்வுகளே காரணம் என்று மாலிக் (ரஹ்) கூறுவார்கள். அதற்குச் சான்றாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டார்கள்:

ஒருமுறை தோட்டத்தில் ஒரு காகமும் ஒரு புறாவும் இணக்கமாக விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். வெவ்வேறு இனம், வெவ்வேறு குணம் கொண்ட

இவ்விரு பறவைகளும் எப்படி நட்போடு இருக்க முடியும் என்று வியந்து கூர்ந்து கவனித்தார்கள்.

அப்போதுதான் தெரிந்ததே, அந்தக் காகத்தின் ஒரு காலும் ஊனமாக இருந்தது, அந்தப் புறாவின் ஒரு காலும் ஊனமாக இருந்தது! "ஆகா! இவ்விரண்டும் நட்புடன் இருப்பதற்குக் காரணம் அந்த ஒரே விதமான ஊனம்தான்!" என்று பிரபஞ்ச விதியை உணர்ந்தார்கள்.

21. மருமகனுக்குச் சொன்ன மார்க்க அறிவுரை

தம் மருமகன் முகைரா இப்னு ஷுஃபாவை நோக்கி மாலிக் (ரஹ்) அவர்கள் உன்னதமான அறிவுரையை வழங்கினார்கள்:

"அப்பனே! உன்னுடைய நண்பனாலோ அல்லது உடன்பிறந்தானாலோ உனது மார்க்கத்திற்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை என்று நீ கருதினால், அவனுடனான தொடர்பை அக்கணமே துண்டித்துக் கொள்! அப்போதுதான் உனது ஈமான் காக்கப்படும்.

அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவர்களில் உனக்கு மேலானவர்களுடனோ அல்லது கீழானவர்களுடனோ மட்டுமே தொடர்பு வைப்பாயாக! மேலானவர்களுடன் தொடர்பு வைத்தால் நன்மைகளை அடைவாய்; கீழானவர்களுடன் தொடர்பு வைத்தால் நீங்கள் இருவருமே நன்மையைப் பகிர்ந்து கொள்வீர்கள்; ஒருவரிலிருந்து மற்றொருவர் மார்க்க அறிவைப் பெற்றுக் கொள்வீர்கள்."

22. மார்க்கப் போரின் காய்ச்சலும் அசரீரியின் விளக்கமும்

இஸ்லாத்திற்காக மார்க்கப் போரில் (ஜிஹாத்) ஈடுபட்டுத் தன்னுயிரைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற ஆசை மாலிக் (ரஹ்) அவர்களுக்கு நீண்ட நாட்களாக இருந்தது. அதற்கான வாய்ப்பு வந்து, போரணியில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். ஆனால், படை புறப்படும் நாளன்று அவர்களுக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு, எழுந்து நிற்கக் கூட இயலாமல் படுக்கையில் விழுந்தார்கள்.

"நான் நற்பேறு கெட்டவன், எனக்கு அந்த ஷஹாதத்தின் பாக்கியம் கிடைக்கவில்லையே" என்று இதயம் நொந்து அழுதவாறே உறங்கினார்கள். கனவில் ஓர் அசரீரி ஒலித்தது:

"மாலிக்கே! நீர் நற்பேறு பெற்றவர். நீர் அந்தப் போருக்குச் சென்றிருந்தால், எதிரிகளால் சிறைபிடிக்கப்பட்டு, பன்றி இறைச்சியை உமது வாய்க்குள் வலுக்கட்டாயமாகத் திணித்திருப்பார்கள்! உமது ஈமானைக் காக்கவே இறைவன் உமக்குக் காய்ச்சலைத் தந்து அத்தீமையிலிருந்து உம்மைக் காத்தருளினான்."

விழித்தெழுந்த மாலிக் (ரஹ்) அவர்களின் நாவும் உள்ளமும் இறைவனுக்கு ஆயிரமாயிர முறை நன்றி செலுத்தின.

23. நிரீஸ்வரனுடன் வாதமும் எரியாத கரங்களும்

ஒருமுறை மாலிக் (ரஹ்) அவர்களுக்கும், இறைவன் இல்லை என்று வாதிட்ட ஒரு நிரீஸ்வரனுக்கும் இடையே மாபெரும் விவாதம் ஏற்பட்டது. நீண்ட நேரம் வாதாடியும் முடிவு எட்டப்படவில்லை. மக்கள், "இருவரின் கைகளையும் பிணைத்துத் நெருப்பில் இடுவோம்; எவரது கையை நெருப்பு எரிக்கவில்லையோ அவரே உண்மையாளர்" என்று தீர்ப்பளித்தனர்.

அவ்வாறே இருவரின் கைகளும் நெருப்பில் இடப்பட்டன. ஆச்சரியமாக, நெருப்பு இருவரின் கைகளையும் எரிக்கவில்லை! நிரீஸ்வரன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. மக்கள் இருவர் பக்கமும் நியாயம் இருப்பதாகக் கூறிச் சென்றனர்.

மனம் உடைந்த மாலிக் (ரஹ்) தன் இல்லம் சென்று குப்புற விழுந்து அழுது பிராத்தித்தார்கள்: "இறைவா! எழுபதாண்டுகளாக உன்னை வணங்கும் என்னையும், உன்னை மறுத்துத் திரியும் அவனையும் உலகறியச் சமமாக்கிவிட்டாயே!" அப்போது அசரீரி கேட்டது: "மாலிக்கே! உமது கை அவனுடைய கையுடன் பிணைக்கப்பட்டிருந்த காரணத்தினாலேயே அவனது கையை நெருப்பு தீண்டவில்லை! இல்லையெனில் அவன் சாம்பலாகியிருப்பான்!" இதைக் கேட்டு அவர்களின் முகம் செந்தாமரையாக மலர்ந்தது.

24. கொடுமைக்கார யூதனின் மனமாற்றம்

பொறுமையின் சிகரமாகத் திகழ்ந்தார்கள் மாலிக் (ரஹ்). அவர்கள் பஸராவில் வாடகைக்குக் குடியிருந்த வீட்டிற்கு அண்டை வீட்டில் ஒரு யூதன் வாழ்ந்து வந்தான். அவன் மாலிக் (ரஹ்) அவர்களுக்குச் செய்த கொடுமைகள் அநேகம். அவன் தன் வீட்டு அசுத்த நீர்க் குழாயை மாலிக் (ரஹ்) அவர்களின் வீட்டுத் தொழுகை இடத்திற்கு மேல் திருப்பிவிட்டான். நாடோறும் அசுத்த நீர் அங்கே பாய்ந்தது.

மாலிக் (ரஹ்) எவரிடமும் குறை கூறாமல், நாள்தோறும் அவ்விடத்தைத் தூய நீரால் கழுவிவிட்டு அங்கே தொழுது வந்தார்கள். இதைக் கண்டு வியப்புற்ற யூதன் ஒருநாள் நேராக வந்து காரணம் கேட்டான். அதற்கு மாலிக் (ரஹ்), "உமது வீட்டு அசுத்த நீரால் எனக்குச் சிரமம்தான். எனினும், எவர் தன் கோபத்தை அடக்கி மக்களின் பிழைகளைப் பொறுத்துக் கொள்வாரோ, அவரைத் தான் நேசிப்பதாக அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான். இறைவனின் நேசத்திற்கு முன்னால் உம்மால் ஏற்படும் இன்னல்கள் எம்மாத்திரம்?" என்றார்கள்.

அவர்களின் எல்லையற்ற சகிப்புத்தன்மையைக் கண்டு உருகிய அந்த யூதன், அக்கணமே தன்னிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு, கலீமாவை மொழிந்து இஸ்லாத்தைத் தழுவினான்.

25. நள்ளிரவு வணக்கமும் பரலோகக் கடிதமும்

இறைவனின் பொருத்தத்திற்காக இரவு முழுதும் நின்று வணங்குபவர்களாக அவர்கள் இருந்தார்கள். ஒரு நள்ளிரவில் அவர்களின் மகள் வந்து, "அப்பா! சற்று ஓய்வெடுங்கள்" என்றபோது, "மகளே! உமது தந்தை இறைவனின் சினத்திற்கு அஞ்சுகிறான்; இறையச்சம் என் கண்ணிலிருந்து உறக்கத்தைப் பறித்துவிட்டது" என்றார்கள். மக்கள் கேட்டதற்கு, "அல்லாஹ்வின் உணவைத் தின்றுகொண்டு ஷைத்தானுக்கு வழிபடலாமா?" என்றார்கள்.

ஓரிரவு உறக்கம் அவர்களை மிகைத்தபோது, ஒரு நாரீமணி கனவில் தோன்றி, "உமக்கு ஓதத் தெரியுமா?" எனக் கேட்டு ஒரு கடிதத்தைத் தந்தாள். அதில் எழுதப்பட்டிருந்தது:

"தீனாருடைய மகனே! உலக இன்பங்கள் உம்மை மறுமையின் பேரினபங்களிலிருந்தும் கண்ணழகிகளிலிருந்தும் பராக்காக்கிவிட்டனவோ? நீர் சொர்க்கத்தை விரும்பினால் உறக்கத்தைத் துறந்து வணக்கத்தில் ஈடுபடும். குர்ஆனை ஓதி தஹஜ்ஜுத் தொழுவது உறக்கத்தைவிட மேலானதாகும்!"

பதறி விழித்தெழுந்த மாலிக் (ரஹ்) உடனே உளுச் செய்துவிட்டு விடிய விடிய வணக்கத்தில் மூழ்கினார்கள்.

26. கானகத்து ஞானி ஸாதூனின் சந்திப்பு

ஒருமுறை பஸராவின் கானகத்தில் தனியே நடந்து செல்லும்போது மாபெரும் துறவி ஸாதூன் (ரஹ்) அவர்களை மாலிக் (ரஹ்) சந்தித்தார்கள். "நலமா?" என்று கேட்டதற்கு, "நெடுந்தொலைவுப் பயணத்திற்கு ஆயத்தமாகி, இறைவனை முன்னோக்கியிருக்கும் ஒருவனிடம் என்ன நலம் விசாரிப்பது?" என்று ஸாதூன் அழுதார்.

"ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டதற்கு, "மறுமைக்குத் தேவையான எந்த நற்பொருளும் என்னிடம் இல்லை; நான் சுவனம் புகுவேனா நரகம் புகுவேனா என்று தெரியாமல் அழுகிறேன்" என்றார். "உங்களை ஏன் மக்கள் பைத்தியக்காரர் என்கிறார்கள்?" என்று கேட்டதற்கு, "என் எஜமானன் மீது நான் கொண்ட காதலே என் எலும்பிலும் சதையிலும் ஊடுருவி என்னை இங்ஙனம் ஆக்கிவிட்டது; இதை அறியாத பைத்தியங்கள் என்னை அங்ஙனம் கூறுகின்றன" என்றார் ஸாதூன். பின்னர் மனிதர்களைத் தவிர்ந்து அல்லாஹ்வை நண்பனாக்கிக் கொள்ளும் கவிதைகளைப் பாடிவிட்டு மறைந்தார்.

27. இறைநாமங்களின் ஐந்து எழுத்துக்களும் வாலிபனின் தியாகமும்

மக்காவுக்கு ஹஜ் செய்யச் செல்லும்போது வழியில் ஓர் இளைஞர் எவ்விதப் பொருளுமின்றி நடந்து செல்வதைக் கண்டார்கள். "உமது உணவு எங்கே?" எனக் கேட்க, "அவனிடமே உள்ளது" என்றார். "செலவிற்குப் பணம் உள்ளதா?" என்றதற்கு, "ஆம்; நான் புறப்படும்போது அவனிடமிருந்து காஃப், ஹா, மீம், ஐன், ஸாத் என்ற ஐந்து எழுத்துக்களை எடுத்துக் கொண்டேன். காஃப் என்றால் காஃபி (போதுமானவன்), ஹா என்றால் ஹாதி (நேர்வழிகாட்டி), மீம் என்றால் முஅத்தீ (நிறைவேற்றுபவன்), ஐன் என்றால் ஆலிம் (தேவையறிந்தவன்), ஸாத் என்றால் ஸாதிக் (உண்மையாளன்). இறைவனை நேசிப்பவனுக்கு இவ்வைந்தும் போதும்" என்றார்.

மாலிக் (ரஹ்) தன் சட்டையை அன்பளிப்பாகத் தர முயன்றபோது மறுத்துவிட்டார். அன்றிரவு மினாவில் அவ்வாலிபர், "இறைவா! எல்லோரும் ஆடு மாடுகளைப் பலி கொடுக்கிறார்கள்; என்னிடம் என் நப்ஸைத் தவிர வேறில்லை, இதோ பலி கொடுத்துவிட்டேன்!" என்று அலறினார்; அக்கணமே உயிர் பிரிந்தது. மாலிக் (ரஹ்) அவரை நல்லடக்கம் செய்துவிட்டு உறங்கும்போது கனவில் கண்டார்கள். அவ்வாலிபர், "இறைவன் எனக்கு ஷஹீத்களுக்கான (தியாகிகள்) பதவியை வழங்கி கௌரவித்தான்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

28. அநாதை ஜனாஸாவும் மலக்குகளின் பட்டோலையும்

பஸராவின் தெருவில் ஒரு ஜனாஸாவைச் சிலர் மட்டும் சுமந்து செல்வதைக் கண்டார்கள். பின்னால் எவரும் வரவில்லை. காரணம் கேட்டதற்கு, "அவன் பெரும்பாவி, அதனால் எவரும் வரவில்லை" என்றனர். மாலிக் (ரஹ்) முன்நின்று தொழுவித்து நல்லடக்கம் செய்துவிட்டு மரநிழலில் உறங்கினர். கனவில் இரு மலக்குகள் வந்து புதைகுழியைத் தோண்டினர். ஒரு மலக்கு, "இவனை நரகவாதி என்று எழுதும், இவன் உறுப்புகள் யாவும் பாவம் செய்துள்ளன" என்றார்.

மற்றொரு மலக்கோ, "அவசரப்படாதீர், இதயத்தைச் சோதியும்" என்றார். சோதித்துப் பார்த்தபோது அங்கே ஈமான் (இறைநம்பிக்கை) இருந்தது! "இவரைச் சுவனவாசி என்று எழுதும், இவனது ஈமான் பாவங்களைப் பொசுக்கிவிட்டது" என்று கூறி மலக்குகள்

மறைந்தனர். அல்லாஹ் தன் அடியாரை மன்னிக்கும் பேரருளை எண்ணி மாலிக் (ரஹ்) வியந்தார்கள்.

29. முண்டமாகக் கிடந்த மனிதனும் காகத்தின் சேவையும்

மற்றொரு முறை ஹஜ்ஜிற்குச் செல்லும்போது, ஒரு காகம் ரொட்டியைக் கவ்விக் கொண்டு செல்வதைக் கண்டு அதன் பின்னே சென்றார்கள். அங்கே காட்டில் ஒரு மனிதன் கை கால்கள் வெட்டப்பட்டு முண்டமாகக் கிடப்பதைக் கண்டார்கள். அந்த காகம் அவனது நெஞ்சில் அமர்ந்து ரொட்டியைப் பிய்த்து அவனது வாயில் ஊட்டியது; பின்னர் அலகுகளில் தண்ணீர் கொண்டு வந்து புகட்டியது.

மாலிக் (ரஹ்) அவரிடம் விபரம் கேட்டபோது, "நான் ஹஜ் செய்ய வந்தேன்; கொள்ளையர்கள் என் கை கால்களை வெட்டி எறிந்துவிட்டுப் பொருள்களைச் சுருட்டிச் சென்றனர். மூன்று நாட்களாக உணவின்றித் தவித்த நான் இறைவனிடம் முறையிட்டேன். அன்றிலிருந்து இக்காகம் மூலம் அல்லாஹ் எனக்கு உணவளிக்கிறான்" என்றார். அல்லாஹ்வின் பேரருளை எண்ணி மாலிக் (ரஹ்) சிலிர்த்துப் போனார்கள்.

30. கிறிஸ்தவ குருவின் தூய நல்வழியும் பாவ உணர்வும்

வழியில் ஒருவர் அழுதுகொண்டே, "இறைவா! நான் செய்த பாவத்தின் சுவை இப்போது இல்லாவிடினும், அதன் எண்ணம் என்னைக் கொல்லாமல் கொல்கிறது" என்று முறையிட்டுக் கொண்டிருந்தார்.

விபரம் கேட்டபோது, "நான் முன்பு கிறிஸ்தவ மதகுருவாக இருந்தேன். ஒரு கனவில் இறுதி நபி (ஸல்) அவர்கள் தோன்றி, ஈஸா (அலை) அவர்களை வணங்குவதை விட்டுவிட்டு அல்லாஹ்வை வணங்குமாறு நேர்வழி காட்டினார்கள். நான் முஸ்லிமாகிவிட்டேன்; ஆயினும் என் முந்தைய பாவ வாழ்வை நினைத்து அஞ்சுகிறேன்" என்றார். மாலிக் (ரஹ்) அவருக்கு ஆறுதல் கூறினார்கள்.

31. அடிமைப் பெண்ணும் இரண்டு பேரீச்சைக் கொட்டைகளின் விலையும்

பஸராவின் வீதியில் ஒரு அழகிய அடிமைப் பெண் பல்லாக்கில் ஆடம்பரமாகச் சென்றுகொண்டிருந்தாள். மாலிக் (ரஹ்) அவளது எஜமானனிடம், "இவளை விற்பீரா?" எனக் கேட்டனர். அவளோ, "தங்களைப் போன்ற ஏழைகளால் என்னை வாங்க முடியுமா?" என ஏளனம் செய்தாள். "உன்னை விடப் பேரழகியையும் என்னால் வாங்க முடியும்" என்றார்கள் மாலிக் (ரஹ்). சிரிப்புடன் அவர்கள் தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். எஜமானன் முன்னிலையில் மாலிக் (ரஹ்), "இவளது விலை இரண்டு பேரீச்சைக் கொட்டைகள் மட்டுமே!" என்றனர்.

அனைவரும் சிரிக்க, எஜமானன் காரணம் கேட்டான். மாலிக் (ரஹ்) கூறினார்கள்: "இவளிடம் அநேகக் குறைகள் உள்ளன. குளிக்காவிடில் நாறும்; பல் துலக்காவிடில் வாய் வீசும்; வயதானால் அழகு அழியும்; மாதவிடாய், அசுத்தங்கள் எனப் பல குறைகள். இவளது அன்போ சுயநலமானது, உமக்குப் பின் வேறொருவனிடம் சென்றுவிடுவாள்.

ஆனால் என்னிடம் இவளை விடக் குறைந்த விலையில், குங்குமத்தாலும் கஸ்தூரியாலும் படைக்கப்பட்ட சொர்க்கத்துப் பெண் இருக்கிறாள். அவள் கடலில் உமிழ்ந்தால் உவர்நீர் தேனாகும்; பிணத்திடம் பேசினால் பிணம் உயிர் பெறும்; அவளது ஒளியின் முன்னால் சூரியனும் மங்கும். அவள் தன் கணவன் மீது மட்டுமே நீங்கா

அன்புடையவள். இவளை வாங்க நள்ளிரவில் எழுந்து இரண்டு ரக்அத் தொழுதால் போதும்; ஏழைகளுக்கு உணவளித்தால் போதும்; உலக ஆசையைத் துறந்தால் போதும்!" என்றார்கள் ஞான உரை.

32. எஜமானனின் துறவறமும் கானகத்துப் பயணமும்

மாலிக் (ரஹ்) அவர்களின் இந்த ஆன்மீகப் பேரொளி மிக்க உரையைக் கேட்ட அடிமைப் பெண்ணின் எஜமானன் நடுங்கிப்போனான். "பெண்ணே! இவர் கூறுவது உண்மையா?" எனக் கேட்க, அவளோ, "முற்றிலும் உண்மை!" என்று அழுது கூறினாள். உடனே அந்த எஜமானன், "பெண்ணே! உனக்கு இதோ விடுதலை அளித்தேன்; என் சொத்துக்கள் அனைத்தையும் ஏழைகளுக்கு தர்மம் செய்தேன்!" என்று கூறி, தன் பட்டு ஆடைகளைக் களைந்துவிட்டு, வாசலில் கிடந்த முரட்டுச் சாக்குத் துணியை உடுத்திக் கொண்டு கானகம் நோக்கிப் புறப்பட்டான்.

அதனைக் கண்ட அந்த அடிமைப் பெண்ணும், "உங்களுக்குப் பின் நான் இங்கு என்ன செய்வது?" என்று கூறி, தானும் முரட்டுத் துணியை உடுத்திக் கொண்டு அவரோடு சென்றாள். இருவரும் காட்டில் கடுந்தவம் புரிந்து அங்கேயே மடிந்தனர்.

32. எஜமானனின் துறவறமும் கானகத்துப் பயணமும்

ஒரு வாலிபன் ஒரு இலட்சம் தீனார் செலவில் மாபெரும் மாளிகை ஒன்றைக் கட்டிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள் மாலிக் (ரஹ்). அவனிடம் சென்று, "இளைஞனே! அந்த ஒரு இலட்சம் தீனாரையும் என்னிடம் தந்துவிட்டால், உனக்குச் சுவனத்தில் இதைவிடப் பன்மடங்கு அழகான மாளிகையை அல்லாஹ்விடம் பெற்றுத் தரும் பொறுப்பை நான் ஏற்கிறேன்; சம்மதமா?" எனக் கேட்டனர். வாலிபன் சிந்தித்துவிட்டு, மறுநாள் பணப்பையுடன் வந்து, "எனக்குச் சுவனத்து மாளிகைக்கான பத்திரத்தை எழுதிக் தாருங்கள்" என்றான்.

மாலிக் (ரஹ்) அவ்வாறே ஒரு பத்திரத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்துவிட்டு, அத்தனை பணத்தையும் ஏழைகளுக்குப் பங்கிட்டார்கள். நாற்பது நாட்களில் அந்த வாலிபன் மரணிக்கும் தருவாயில், அப்பத்திரத்தைத் தன் நெஞ்சில் வைத்து அடக்கம் செய்யுமாறு கூறினான். அவன் இறந்த மறுநாள், மாலிக் (ரஹ்) பள்ளிவாசலின் மிஹ்ராபில் ஒரு காகிதம் கிடப்பதைக் கண்டனர். அதைத் திறந்து பார்த்தபோது:

"என் அடியார் மாலிக் இப்னு தீனார் வழங்கிய வாக்குறுதியை நாம் முற்றிலும் ஏற்று, அவ்வாலிபருக்குச் சுவனத்தில் எழுபது மடங்கு அழகான மாளிகையை நல்கியுள்ளோம்!" என்று நற்காட்சி எழுதப்பட்டிருந்தது. வாலிபனின் இல்லத்தார் புதைகுழிக்குள் வைத்த பத்திரமே இதுவெனக் கண்டு வியப்புற்றனர்.

34. அரசரின் செல்லப் பிள்ளையும் இறைவனின் நண்பனும்

அவர்களின் வீட்டின் அருகே ஒழுக்கக் கேடுகளில் உழன்று கொண்டிருந்த ஒரு வாலிபனை மாலிக் (ரஹ்) கண்டிக்கச் சென்றபோது, "நான் அரசரின் செல்லப்பிள்ளை, என்னை எவரும் ஒன்றும் செய்ய முடியாது" என வீராப்புப் பேசினான். "உன்னை இறைவனிடம் முறையிடுவேன்" என்றதற்கு, "அவன் அருளாளன், என்னை மன்னிப்பான்" என்றான். மக்களின் புகாரால் மீண்டும் அவனது இல்லம் நோக்கிச் சென்றபோது, அசரீரி ஒலித்தது: "மாலிக்கே! நீர் என்னுடைய நண்பனைத் தொடாதீர்!"

வியப்புடன் வாலிபனிடம் சென்று விபரத்தைக் கூறியபோது, அவன் உருகிப்போனான். "அப்படியா! அல்லாஹ் என்னை நண்பன் என்று அழைத்துவிட்டானா! இனி என்

சொத்துக்கள் யாவும் அவனுக்கே!" என்று அத்தனையையும் தர்மம் செய்துவிட்டுப் பஞ்சையாய் மக்கா சென்றான். பின்னர் மாலிக் (ரஹ்) அவனை மக்காவில் கண்டபோது, "என் நண்பனைக் காண வந்தேன்" என்று கூறிவிட்டு அக்கணமே உயிர் நீத்தான் அவ்வாலிபன்.

35. சுங்க அதிகாரிகளின் அநியாயமும் மாலிக்கின் எச்சரிக்கையும்

கப்பலில் சரக்குகளை ஏற்றி வந்த ஒரு ஏழையின் கப்பலைச் சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தபோது, அவனுக்காகப் பரிந்துரைக்க மாலிக் (ரஹ்) துறைமுகம் சென்றனர். அதிகாரிகள் இவர்களைக் கண்டதும் மரியாதையுடன் கப்பலை விடுவித்தனர். பின்னர் தமக்காகப் பிராத்திக்குமாறு அவர்கள் வேண்டியபோது, மாலிக் (ரஹ்) சீறினர்:

"நீங்கள் அநியாயமாக வசூலிக்கும் அந்தப் பணப்பெட்டியை உங்களுக்காகப் பிராத்திக்கச் சொல்லுங்கள்! ஆயிரக்கணக்கான ஏழைகள் உங்களைச் சபித்துக் கொண்டிருக்கும்போது, என் துஆ எப்படிப் பலிக்கும்? அநியாயம் செய்த உங்களை விடுத்து, பாதிக்கப்பட்டவர்களின் சாபத்தை அல்லவா இறைவன் ஏற்பான்!" என்றனர். "நாங்கள் எசமானர்களின் கட்டளைப்படியே செய்கிறோம்" என்றதற்கு, "அயோக்கியர்களின் நம்பிக்கைக்குரிய அலுவலனும் அயோக்கியனே!" என இடித்துரைத்தார்கள்.

35. சுங்க அதிகாரிகளின் அநியாயமும் மாலிக்கின் எச்சரிக்கையும்

ஒருவன் மரணத் தவிப்பில் கிடப்பதைக் கண்டு அவனுக்குக் கலிமாச் சொல்லிக் கொடுத்தார்கள் மாலிக் (ரஹ்). ஆனால் அவனது நா கலிமாச் சொல்லாமல் "பத்து, பதினொன்று" என்றே பிதற்றியது. அவன் கூறினான்: "என் முன்னால் நெருப்பாலான இரு மலைகள் உள்ளன, நான் கலிமாச் சொல்ல முயலும்போதெல்லாம் அவை என்னைச் சுட்டெரிக்க வருகின்றன!"

விசாரித்தபோது, அவன் வியாபாரத்தில் வாங்குவதற்கு ஒரு படியையும், விற்பதற்கு ஒரு கள்ளப் படியையும் வைத்திருந்தது தெரிந்தது. மாலிக் (ரஹ்) அப்படிகளை உடைத்தெறிந்த பின் அவனது நிலை பற்றிக் கேட்டபோது, "வேதனை தாங்கவில்லையே" என்று கத்தியவாறே அவன் உயிர் பிரிந்தது. கள்ளத்தராசு மறுமையில் நரகில் தள்ளும் என்பதை மக்கள் உணர்ந்தனர்.

37. பிரசவ வேதனையும் நான்கு வயதுச் சிறுவனின் பிறப்பும்

நான்காண்டுகளாகக் கருவுற்றுப் பிரசவ வேதனையால் துடித்த ஒரு பெண்ணிற்காக அவளது கணவன் வந்து வேண்டியபோது, மாலிக் (ரஹ்) கையேந்திப் பிராத்தித்தார்கள்: "இறைவா! அவளது கருவில் இருப்பது பெண்ணாயின் அதனை ஆணாக மாற்றுவாயாக! நீ நாடியதைச் செய்ய வல்லவன்!"

அவர்கள் கைகளைக் கீழே இறக்குவதற்குள், ஒரு மனிதன் சுருட்டை முடியும் பற்களும் முளைத்த நான்கு வயதுச் சிறுவனைச் சுமந்து வந்து, "இதோ இப்பொழுதுதான் இக்குழந்தை பிறந்தது!" என்றான். கொப்பூழ்கொடி கூட அறுக்கப்படாத நிலையில் அச்சிறுவன் இருந்தான். மாலிக் (ரஹ்) அவர்களின் ஆன்மீக ஆற்றலை (கறாமத்) ஊரே கண்டு வியந்தது.

38. இறுதிப் பேருரையும் ஆன்மாவின் விடைபெறலும்

வயதாக ஆகத் தனிமையையே விரும்பிய மாலிக் (ரஹ்) அவர்களின் இறுதி நாட்கள் வந்தன. ஒரு ஜனாஸா அடக்கத்தின்போது மயங்கி விழுந்த அவர்கள், இல்லம் சுமந்து வரப்பட்டனர். மூர்ச்சை தெளிந்ததும் கூறினர்: "மரணப் பறவை நம் தலைக்கு மேல் வட்டமிடுகிறது. வாழ்க்கை என்பது இரவல் வாங்கப்பட்ட சில மணி நேரங்கள் மட்டுமே!"

பின்னர் தன் ஊழியர்களிடம், "நான் இறந்ததும் என் நெற்றியில் 'மாலிக் தன் எசமானனுக்கு மாறுசெய்து வெருண்டோடிய அடிமை' என்று எழுதுங்கள்! என் கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்துச் செல்லுங்கள்; புதைகுழியில் என் முகம் கறுத்துள்ளதா ஒளிர்கிறதா என்று பாருங்கள்; மஹ்ஷரில் என் வலக்கரத்தில் பட்டோலை கிடைக்கிறதா என்று கவனியுங்கள்!" என்று அழுது கூறினார்கள்.

மரணிக்கும் தருவாயில் முப்பதாண்டுகளாகத் தாம் ஆசைப்பட்ட பாலும் தேனும் கலந்த உணவைக் கொண்டு வரச் செய்தபோது, "மனமே! முப்பதாண்டு பொறுத்தாய், இன்னும் சில நொடிகள் பொறுத்திரு!" என்று கூறி அதைத் தள்ளிவைத்துவிட்டு, தன் 'கலிமா' விரலை உயர்த்தி, "லா இலாஹ இல்லல்லாஹ்" என்று திருநாமம் மொழிந்து தன் தூய ஆன்மாவை இறைவனிடம் ஒப்படைத்தார்கள்.

ஹிஜிரி 131-ஆம் ஆண்டில் (கி.பி. 748) பஸராவில் இந்த ஆன்மீகச் சுடர் அணைந்தது.

யா அல்லாஹ்! பேரருளாளனே! கள்ள நோக்கம் களைந்து, உனக்காக மட்டுமே தன் வாழ்வை அர்ப்பணித்த உத்தமத் துறவி, எங்கள் பெருமதிப்பிற்குரிய மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களின் புனித வரலாற்றைப் புத்தக வடிவில் கொண்டுவர நாடும்

உனது இந்தப் பாவியை மன்னிப்பாயாக

நல்லடியாரின் கூட்டத்தில் சேர்த்து அருள்வாயாக நல்லடியானின் தூய நோக்கத்தை நீ ஏற்றுக் கொள்வாயாக!

இப்புனித வரலாற்றை எழுதுபவர், படிப்பவர், பார்ப்பவர் யாவரின் உள்ளங்களிலும் உன்னைப் பற்றிய அச்சத்தையும், மார்க்கத்தின் மீதான தூய அன்பையும் நிலைபெறச் செய்வாயாக! அவர்களின் பாவங்களை மன்னித்து, இதயங்களை ஆன்மீகப் பரவசத்தால் நிரப்புவாயாக!

இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்கு எழிலார்ந்த வாழ்வை நல்கி, மறுமையில் சுவனப் பெருவெளியில் உனது அண்டை வீட்டுக்காரர்களாக, முஹம்மது முஸ்தஃபா

(ஸல்) அவர்களுடனும், மாலிக் இப்னு தீனார் (ரஹ்) போன்ற இறைநேசச் செல்வர்களுடனும் ஒன்று சேர்க்கும் பாக்கியத்தை தந்தருள் புரிவாயாக!

ஆமீன் யா ரப்பல் ஆலமீன்!

ஆக்கம்

திருப்பூர்

K அமானுல்லாஹ்

செல் 9894197795

இமாம் மாலிக் தீனார் (ரஹ்) வரலாற்றுத் தொகுப்பு

ஆக்கம்
திருப்பூர்
K அமானுல்லாஹ்
செல் 9894197795

P D F உள்ளது
தேவை உள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்
இன்ஷா அல்லாஹ் அனுப்பி வைக்கிறோம்